Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

Official Property Record

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



ஊராட்சி மனைப்பிரிவு அனுமதி உத்தரவு

தனி அலுவலர், வாங்கல் குப்புச்சிபாளையம் ஊராட்சி / வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), ஊராட்சி ஒன்றியம், கரூர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை.. திருமதி.ஜெ.விஜயலெட்சுமி

நா.க எண் : 5 / 2024-25 நாள்: 29.03.2025

பொருள் : மனைப்பிரிவு அனுமதி – கரூர் ஊராட்சி ஒன்றியம் – வாங்கல் குப்புச்சிபாளையம் ஊராட்சி – குப்புச்சிபாளையம் கிராம சர்வே எண். 17/B2B ல் 0.44.50 ஹெக்டேர் (1.10 ஏக்கர்) பரப்பில் அமைந்துள்ள உத்தேச குடியிருப்பு மனைப் பிரிவிற்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கியது– ஒப்புதல் அளித்த மனைபிரிவிற்கு அங்கீகாரம் அளித்து உத்தரவிடல் – தொடர்பு.

பார்வை :

1. அரசாணை எண்–16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ந.நி.(1) துறை நாள் : 31.01.2020
2. அரசாணை எண்–18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ந.நி.(1) துறை நாள்: 04.02.2019
3. அரசாணை எண் – 79, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள் : 04.05.2017
4. அரசாணை எண்–138, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை, நாள் 04.06.2004.
5. அரசாணை எண் – 141, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் (UD4(3) துறை, நாள் 23.09.2020.
6. அரசாணை எண் –181, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் (UD4(1) துறை, நாள் 09.12.2020.
7. அரசு கடிதம் எண் – 19113/ நவ4(3)/2017–1, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள். 30.08.2017.
8. நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண் 4367/2019/TCP2, நாள்: 14.08.2021
9. நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண் 13686/2017/LA1, நாள் :08.09.2017
10. நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் 320/2022/TCP3 நாள் 07.01.2022.
11. கரூர் மாவட்ட நகர் ஊரமைப்புத்துறை உதவி இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண் IRD3EBVP /2022/TCP நாள் 08.06.2023
12. எண் 2 இணை சார்பதிவகம் கரூர் நன்கொடை ஆவண எண்கள். 1060/2023 மற்றும் 1061/2023, நாள். 02.05.2023
13. வாங்கல் குப்புச்சிபாளையம் ஊராட்சி தீர்மான எண்.56/2025 நாள். 25.02.2025
14. ஊராட்சிக்கு செலுத்திய மனைப்பிரிவு அங்கீகார கட்டணம் மற்றும் மனைப்பிரிவு கூராய்வு கட்டண இதர வசூல் ரசீது எண்கள். 2024–2025/17/1/13/7/172 மற்றும் 2024–2025/17/1/13/7/173 நாள்.29.03.2025
15. அரசுக் கணக்கில் செலுத்திய நிலப்பயன் மாற்றக் கட்டண இணையதள சலான் எண்.20250328019812 நாள்.29.03.2025

உத்தரவு :

பார்வை 11–ல் கண்டுள்ள கரூர் மாவட்ட நகர் ஊரமைப்புத்துறை உதவி இயக்குநர் அவர்களின் செயல் முறைகளில் கரூர் ஊராட்சி ஒன்றியம் வாங்கல் குப்புச்சிபாளையம் ஊராட்சி குப்புச்சிபாளையம் கிராம சர்வே எண். **17/B2B** ல் **0.44.50** ஹெக்டேர் **(1.10 ஏக்கர்)** பரப்பில் அமைந்துள்ள உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு **"SWP/DTCP/KARUR/LAYOUT No.141 / 2023"** என எண்ணிட்டு தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 –ன் பிரிவு 47ன் படி தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பார்வை 14 –ல் காணும் ரசீது எண்களின்படி மனைப்பிரிவு அங்கீகார கட்டணம் ரூ.6000/– மற்றும் மனைப்பிரிவு கூராய்வு கட்டணம் ரூ.18000/– ஊராட்சிக்கு செலுத்தப்பட்டுள்ளது. பார்வை 15 –ல் காணும் இணையதள சலான் படி நிலப்பயன் மாற்றக் கட்டணம் ரூ.42000/– அரசு கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு **திருமதி.K.திவ்யபாரதி க/பெ. கார்வேந்தன், 67/B1, ஓடையூர், குப்புச்சிபாளையம் கிராமம், மண்மங்கலம் வட்டம், கரூர் மாவட்டம்** என்பவருக்கு மனைப்பிரிவு அங்கீகாரம் அளித்து இதன் வழி உத்திரவிடப்படுகிறது.

மனைப்பிரிவு நிபந்தனைகள்

1. **I)** தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள் – 2019 இல் மனைப்பிரிவிற்காக விதிக்கப்பட்டுள்ள அனைத்து விதிகளும் இம்மனைப்பிரிவிற்குப் பொருந்தும். எனவே பொருத்தமான விதிகள் அனைத்தும் பின்பற்றப்பட வேண்டும்.

   ii) மனைகள் மற்றும் தெருக்கள் அங்கீகரிக்கப்பட்டு **"SWP/DTCP/KARUR/LAYOUT No.141/2023"** என எண்ணிடப்பட்டு வரைபடத்தின் படி எல்லைக் கற்களால் வரையறுக்கப்பட வேண்டும். மனைப்பிரிவுக்குள் அமையும் தெருக்கள் அனைத்திற்கும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள் – 2019 விதி 47(11) – ன் படி மனைப்பிரிவில் தேவைப்படும் சாலை குடிநீர் வடிகால் வசதி கழிவுநீர் வசதி மற்றும் மின்சார வசதிகளை ஏற்படுத்துவதற்கு உள்ளாட்சி மற்றும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தால் மதிப்பீடு செய்யப்படும் செலவுத் தொகையினை மனுதாரரே ஏற்றுக் கொள்ள வேண்டும்.

   iii) மேற்படி மனைப்பிரிவு சாலைகள் மற்றும் பொது உபயோகத்திற்கென இடம் (உள்ளாட்சி மற்றும் TANGEDCO) ஒதுக்கப்பட்டிருப்பின் அவ்விடத்தினை உள்ளாட்சி மற்றும் TANGEDCO – விற்கு தான ஆவணம் மூலம் ஒப்படைப்பு செய்து அவைகளை நில அளவை செய்து உட்பிரிவு செய்வதற்கான செலவு / கட்டணத் தொகையினை மனுதாரரிடமிருந்து உள்ளாட்சி மற்றும் TANGEDCO நிறுவனங்கள் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

   iv) உதவி இயக்குநர் கரூர் மாவட்ட நகர் ஊரமைப்புத் துறையில் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள் சாலைகளின் அமைப்புகள் அளவுகள் பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மற்றும் மனையை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டு உதவி இயக்குநர் கரூர் மாவட்ட நகர் ஊரமைப்புத்துறையில் முன் ஒப்புதலின்றி செய்தல் கூடாது.

   (v) இரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு (SPLAY) நிர்ணயிக்கப்பட்ட அளவுகளுடன் அமைக்கப்பட வேண்டும்.

2. மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளை நிறைவேற்றுதற்கு முன்பு எந்த ஒரு மனையையும் விற்கவோ குத்தகைக்கு விடவோ வேறு எந்த விதத்திலும் பரிமாற்றம் செய்யவோ அல்லது எந்த ஒரு மனையிலும் கட்டிடம் கட்டவோ கூடாது.

3. அங்கீகரிக்கப்பட்டுள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையும் பொது காரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகள் தவிர மற்ற மனைகள் குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும். இதில் கடை பண்டக சாலை மற்றும் குடியுருப்பு அல்லாத கட்டிடம் கட்டுவதற்கு பயன்படுத்துதல் கூடாது. பொது உபயோகத்திற்காக தெரிவு செய்யப்பட்டுள்ள இடங்கள் யாவும் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் குறிக்கப்பட்டுள்ள உபயோகங்களுக்காக மட்டும் பயன்படுத்தப்பட வேண்டும். அந்த இடங்களை ஒதுக்கப்பட்ட உபயோகத்திற்காக நில அளவை ஆவணங்களில் உட்பிரிவு செய்து கொள்ள வேண்டும்.

4. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள தெருக்களுக்கு வரைபடத்தில் காட்டியுள்ளவாறு கட்டிட வரம்பு விடப்பட வேண்டும். மனைப்பிரிவில் அமையும் பொருளாதார ரீதியாக நலிவடைந்த பிரிவினருக்காக ஒதுக்கப்படும் மனைகளுக்கு 1 மீட்டரும் மற்ற மனைகளுக்கு (other than EWS Sites) 9 மீ அகலம் சாலைகளுக்கு கீழ் 1.5 மீட்டரும் 9 மீட்டருக்கு மேல் மற்றும் 18 மீட்டர் அகலமுள்ள சாலைகளுக்கு கீழ் 3.0 மீட்டரும் 18 மீட்டருக்கு மேல் மற்றும் 30.50 மீட்டர் அகலமுள்ள சாலைகளுக்கு 6 மீட்டர் என்ற அளவிலும் கட்டிட வரம்பு விடப்பட வேண்டும். தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள் 2019 – ன் படி மனையின் எல்லையிலிருந்து தெருவின் உயர்மட்டம் அமைய வேண்டும் மற்றும் அவ்விதிகளின் படியே உள்ள உயரத்திற்கு மேற்படாத சுற்றுச்சுவர் அல்லது வேலி தவிர வேறு எந்த வித கட்டிடமோ சுவரோ கட்டுதல் கூடாது.

5. தளபரப்பு குறியீடு எண் (FSI) TNCDBR 2019 –ன் படி அனுமதிக்கலாம்.

6. மனைப்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதியை தெரு மட்டத்திற்கு உயர்த்தப்பட வேண்டும்.

7. சமன்படுத்தவோ நிலச்சரிவை சீர் செய்யவோ எடுத்துப்பள்ளங்கள் குழிகள் ஏற்படுத்தவோ கூடாது.

8. 9.00 மீட்டர் அகலத்திற்கு அதிகமாக உள்ள எல்லா மனைப்பிரிவு சாலைகளிலும் நிழல் தரும் மரங்கள் நடப்பட வேண்டும். மரங்கள் சாலைகளின் எல்லையிலிருந்து 1.00 மீட்டர் விடப்பட்டு சாலைகளின் ஓரமாக இருபுறமும் 9.00 மீட்டர் இடைவெளிகளில் நடப்பட வேண்டும்.

9. மனுதாரர் மனைப்பிரிவிற்கு ஊராட்சி மன்ற தலைவரிடமிருந்து இறுதி ஒப்புதல் பெற்றுக் கொள்ள வேண்டும். மனைப்பிரிவில் அமையும் மனையில் கட்டடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டடத்திற்கும் உள்ளாட்சியிடமிருந்து கட்டட அனுமதி பெற வேண்டும்.

10. மனைப்பிரிவில் ஒதுக்கப்பட்ட கடை, கடைகளுக்கான மனையினை வரைபடத்தில் காட்டியுள்ளது போல் உட்பிரிவு செய்துக் கொள்ள வேண்டும். இவைகளை அதற்குரிய உபயோகத்திற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்.

11. கோவில் தேவாலயம் மசூதி ஆகியவற்றிற்காக ஒதுக்கப்பட்டிருந்தால் அம்மனைகளை வரைபடத்தில் காட்டியுள்ளது போல் உட்பிரிவு செய்து கொள்ள வேண்டும். மனைகளை அதற்குரிய உபயோத்திற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

12. பூங்கா சிறுவர் விளையாடும் இடம் மற்றும் திறவிடம் போன்றவைகளுக்காக ஒதுக்கப்பட்ட மனைகளை வட்டாட்சியர் அலுவலகத்தில் உட்பிரிவு செய்து பதிவு செய்யப்பட்ட தானப்பத்திரம் மூலம் உள்ளாட்சியிடம் தானமாக ஒப்படைக்கப்பட வேண்டும்.

13. மனைப்பிரிவின் ஊடே குறைந்த அழுத்த உயர் அழுத்த மின் கம்பிப் பாதை தந்திக் கம்பிப் பாதை அமைந்தால் கம்பிப் பாதையை சாலையில் ஓரமாக அல்லது அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் காண்பித்துள்ளவாறே மாற்றி அமைக்க வேண்டும்.

14. மனைப்பிரிவின் சொந்தக்காரர்கள் மேற்படி நிபந்தனைகளுக்குட்படுவதாக எழுத்து மூலமாக நிர்வாக அதிகாரி (Executive Authority) – யுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். மனைப்பிரிவு நிபந்தனைகளை தொடர்புடைய சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும். மனைகள் விற்கப்படுவதும் அல்லது குத்தகைக்கு விடப்படுவதும் மேற்படி நிபந்தனைகளுக்குட்பட்டுதான் செய்யப்பட வேண்டும். மனைகள் விற்பவரையும் வாங்குபவரையும் கட்டுப்படுத்தும் வகையில் மேற்படி நிபந்தனைகளை விற்பனை பத்திரங்களின் பகுதியாக சேர்க்கப்பட வேண்டும்.

15. அ) அரசாணை எண்.18 ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை நாள் 04.02.2019–ன் படி நில உரிமை குறித்து உறுதி செய்து கொள்வது உள்ளாட்சி நிர்வாகத்தின் பொறுப்பானதாகும் மற்றும் நிர்வாக அதிகாரியால் Executive Authority நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றின் பேரில் மற்றும் மனுதாரர் சமர்ப்பிக்கப்பட்ட A மற்றும் C ன் படியும் இத்தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்படுகிறது. மேற்படி இம்மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்புத் துறையால் தொழில் நுட்ப ஒப்புதல் (Technical Approval) மட்டுமே வழங்கப்பட்டுள்ளது என்பதால் மனைப்பிரிவிற்கான இட உரிமை தொடர்பாக வில்லங்கம் ஏதேனும் இருப்பின் உள்ளாட்சியினரால் பரிசீலித்து முடிவு எடுக்கப்படும்.

ஆ) தமிழ்நாடு நகர்ப்புற நில உச்சவரம்பு சட்டம் 1978 நடைமுறையில் உள்ள இடத்தில் அமைந்தால் மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்கப்பட்ட விபரத்தினை தொடர்புடைய உச்சவரம்புச் சட்ட அதிகாரிகளுக்கு தெரிவித்தல் வேண்டும்.

இ) 1984 – ம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதல் சட்டப்பிரிவு 4 மற்றும் நில உச்சவரம்பு சட்டம் 1978 மற்றும் நிலச் சீர்திருத்தச் சட்டம் 1961 தொடர்பாக உள்ளாட்சி மற்றும் மனுதாரர்கள் அளித்த உறுதிமொழியின் பேரில் மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. எனவே இம்மனைப்பிரிவிற்கான நிலம் மேற்படி சட்டங்களின் நடவடிக்கைகளுக்கு உட்படின் அதற்கு மனுதாரர்களே பொறுப்பாவார்.

ஈ) மேற்படி மனைப்பிரிவிற்கு உள்ளாட்சியால் அங்கீகாரம் அளிக்கப்படும் போது நிர்வாக அதிகாரியின் அங்கீகார நடவடிக்கையின் நகலினை நகர ஊரமைப்புத்துறைக்கு அனுப்பி வைக்கப்படும்.

உ) மேலும் மேற்படி சட்டங்களின் படி நில அர்ஜீதம் சம்மந்தமாக நில ஆர்ஜீதப்பட்டியல் (Land Plan Schedule) எதுவும் பரிசீலனைக்குப் பெறப்படவில்லை என்பதை உறுதி செய்து மன நிறைவு அடைந்த பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவிற்கு ஒப்புதல் அளித்து அங்கீகாரம் வழங்கப்படும்.

16 மனுதாரர் குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்திற்கு மனைப்பிரிவு அங்கீகரித்த மன்றத் தீர்மான எண்ணும் நாளும் மன்றத்திற்கும் மனுதாரருக்கும் ஒப்பமான நாளும் எண்ணும் தெளிவாக குறிப்பிட்டு அறிவிப்பு செய்யப்பட வேண்டும்.

17 மனுதாரர் சமர்ப்பித்துள்ள நில உரிமை ஆவணங்களின்படி உள்ளாட்சி அலுவலர் வழங்கிய சான்றினை ஏற்று நில உரிமை குறித்து பரிசீலிக்கப்படுகிறது. எனவே உண்மையில் நில உரிமம் இல்லாத இடத்திற்கு மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்ட காரணத்திற்கான எந்த உரிமையும் கொண்டாட முடியாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

18 இம்மனைப்பிரிவிற்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பொது மக்களுக்கோ அல்லது சுற்றுச்சார்பு சூழலுக்கோ பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் வழங்கப்பட்ட மனைப்பிரிவு அனுமதி எவ்வித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும்.

19 உள்ளாட்சி அதிகாரியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் ஒன்றும் நிபந்தனை படிவம் ஒன்றும் சம்பந்தப்பட்ட பதிவுத்துறை அலுவலருக்கு மேல் நடவடிக்கைக்காக அனுப்பி வைக்கப்படும்.

20 விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு, நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

21 ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம் விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயில் 1.8 மீ X 1.2மீ அளவிலான நிரந்தர அறிவிப்பு தகவல் பலகை பொது மக்கள் பார்வைக்கு நிரந்தரமாக நிறுவப்பட வேண்டும்.

22 மனைப்பிரிவில் அமையும் மனைகளில் குடியிருப்பு கட்டிட அபிவிருத்தி அடையும் பொழுது கட்டிடத்திலிருந்து வெளியேறும் கழிவுகள் மற்றும் கழிவுநீர் ஆகியவைகள் அருகில் உள்ள நிலங்களில் கலக்கா வண்ணம் உள்ளாட்சியால் உறுதி செய்யப்படும்.

23 நகர் ஊரமைப்புத்துறையினரால் வழங்கப்பட்ட தொழில் நுட்ப அனுமதியின் அடிப்படையிலேயே மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கப்படுகிறது. நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டால் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட மனைப் பிரிவு ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்ய பரிந்துரை செய்யப்படும்.

தனி அலுவலர்

வாங்கல் குப்புச்சிபாளையம் ஊராட்சி மற்றும்
வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ),
ஊராட்சி ஒன்றியம், கரூர்.

பெறுதல்:

திருமதி.K.திவ்யபாரதி க/பெ. கார்வேந்தன், 67/B1, ஓடையூர், குப்புச்சிபாளையம் கிராமம், மண்மங்கலம் வட்டம், கரூர் மாவட்டம் .

நகல் :

1. உதவி இயக்குநர் நகர் ஊரமைப்பு துறை கரூர் மாவட்டம் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
2. உதவி இயக்குநர் நில அளவை துறை கரூர் மாவட்டம் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
3. எண் 2 இணை சார்பதிவாளர், சார்பதிவகம், கரூர் .
4. வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), ஊராட்சி ஒன்றியம் கரூர்.
5. மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் , வாங்கல் குப்புச்சிபாளையம் ஊராட்சி.

குடிநீரை வீணாக்காதீர், சிக்கனமாக பயன்படுத்துவீர்.

வாங்கல் குப்புச்சிபாளையம் ஊராட்சி, கரூர் ஊராட்சி ஒன்றியம், கரூர் மாவட்டம்

இதர வசூல் ரசீது

ரசீது எண் : 2024-2025/17/1/13/7/172 நாள் : 29-03-2025 14:28

பணம் செலுத்துபவரின் பெயர் : K Divyabharathi

பணம் செலுத்துபவரின் கைபேசி எண் : 9944359991 தொகை செலுத்திய வகை : ரொக்கம்

கோரிக்கை எண்	பெருந்தலைப்பு குறியீடு	சிறுந்தலைப்பு குறியீடு	ரசீது விவரங்கள்	தொகை (₹)
952150	கட்டணம்	திட்ட அனுமதி (திட்ட அனுமதி)	Layout Approved Charges	6,000
			மொத்தம்	**6,000**

ரூபாய்(₹) : ஆறாயிரம் மட்டும்

ஊராட்சி செயலாளர்,
வாங்கல் குப்புச்சிபாளையம் ஊராட்சி.

செயல் அலுவலர்/
தனி அலுவலர்
வாங்கல் குப்புச்சிபாளையம் ஊராட்சி

*பின்னணு முறையில் தயாரிக்கப்பட்டது. கையொப்பம் தேவையில்லை.

குடிநீரை வீணாக்காதீர், சிக்கனமாக பயன்படுத்துவீர்.

வாங்கல் குப்புச்சிபாளையம் ஊராட்சி, கரூர் ஊராட்சி ஒன்றியம், கரூர் மாவட்டம்

இதர வசூல் ரசீது

ரசீது எண் : 2024-2025/17/1/13/7/173 நாள் : 29-03-2025 14:30

பணம் செலுத்துபவரின் பெயர் : K Divyabharathi

பணம் செலுத்துபவரின் கைபேசி எண் : 9944359991 தொகை செலுத்திய வகை : ரொக்கம்

கோரிக்கை எண்	பெருந்தலைப்பு குறியீடு	சிறுந்தலைப்பு குறியீடு	ரசீது விவரங்கள்	தொகை (₹)
952164	கட்டணம்	திட்ட அனுமதி (திட்ட அனுமதி)	Layout Scrutiny Fees	18,000
			மொத்தம்	**18,000**

ரூபாய்(₹) : பதினெட்டு ஆயிரம் மட்டும்

ஊராட்சி செயலாளர்,
வாங்கல் குப்புச்சிபாளையம் ஊராட்சி.

செயல் அலுவலர்/
தனி அலுவலர்
வாங்கல் குப்புச்சிபாளையம் ஊராட்சி

*பின்னணு முறையில் தயாரிக்கப்பட்டது. கையொப்பம் தேவையில்லை.

Government of Tamil Nadu

E-Challan

Payable at - ST KARUR

Remitter Copy

Challan Number	20250328019812	**Challan Date**	28-Mar-2025	**Payment Date**	
Remitter Type	Public	**Remitter Code**	30	**Remitter Name**	K.DIVYABHARATHI
Mobile No.	9787659681	**Aadhaar No.**		**Remitter Address**	Karur
Department	02602-Directorate of Town and Country Planning	**District**	KARUR	**DDO Code**	28030143
DDO / Office Name	ASSISTANT DIRECTOR, DISTRICT TOWN AND COUNTRY PLANNING, KARUR	**Department Transaction ID**		**Office Name**	

Receipt Type	Sub Type	Acct Code	Amount	Reference No.	Remark
Others	Collections	021760800AS22709	42000	ROC.No. IRD3EBVP/2022/TCP Dt. 08.06.2023	Kuppuchipalayam Village S.F.No.17/B2B

Payment Mode Offline **Payment Type** Cash **Payment Status** Pending

Challan Amount (Rs.) 42,000 **Bank Name** SBI

Amount (in words) Forty Two Thousand Rupees only. **Bank ref no.** CPAEZAOFR1

Remitter Signature K. Divyabharathi

For Bank Use

Bank Branch Stamp and Signature of Cashier

भारतीय स्टेट बैंक State Bank Of India
करूर शाखा Karur Branch - 00856
29 MAR 2025
MATHIYA - 5615461
Checked By.
Entered By.
Manager/Accountant

Please Note*, Department Transaction ID and Office Name fields are created only for 4 interface department Registration and Transport and CT for there specific requirements and the values entered in this fields are values passed by them not from IFHRMS.



our services doesn't just end there

Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



empowering your real estate decisions with smart tools

Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate